தரம்
# 09

# தி/கிண்/குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்

## முதலாந் தவணை மதிப்பீடு - 2020

வரலாறு

புள்ளி

## Covid – 19 விடுமுறைகால செயற்பாடுகள்

சுட்டெண்:………………

**நேரம் 2 மணித்தியாலயம்**

பகுதி – I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. ஒல்லாந்தரது மதமாக அமைவது
   1) கத்தோலிக்கம் 2) பௌத்தம் 3) புரட்டஸ்தாந்து 4) இந்து
02. 1602 ம் ஆண்டு ஜோரிஸ்வான் ஸ்பில்பேர்ஜன் எனும் ஒல்லாந்தத் தளபதி 3 கபபல்களுடன் எப்பகுதியில் தறையிரங்கினான்
   1) அம்பாறை 2) மட்டக்களப்பு 3) திருகோணமலை 4) காலி
03. ஒல்லாந்தர் இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறிய ஆண்டு
   1) 1658 2) 1676 3) 1796 4) 1815
04. 1656 ஆம் ஆண்டு இரண்டாம் இராஜசிங்க மன்னனை சந்தித்த தூதுவர்
   1) ஸ்பில்பேர்ஜன் 2) ஜெராட் ஹல்ப்ட் 3) கலன் அல்பஸ் 4) டெகல்
05. குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்டவன்
   1) விமதர்ம சூரியன் 2) இராஜசிங்கன்
   2) வீரபராக்கிரமபாகு நரேந்திர சிங்கன் 4) இராஜாதி இராஜசிங்கன்
06. இலங்கையில் சீயம் நிக்காய ஆரம்பமாகிய ஆண்டு
   1) 1762 2) 1753 3) 1747 4) 1739
07. ஒல்லாந்தர்களின் கீழைத்தேய தலைமை நிலையம் எது?
   1) புத்தேவியா 2) சீனா 3) தாய்லாந்து 4) பர்மா
08. இலங்கைத் தீவானது அந்நிய ஆதிக்கம் கவனம் செலுத்தக் காரணமான பயிர் எது?
   1) கறுவா 2) ஏலம் 3) கராம்பு 4) இஞ்சி
09. ஒல்லாந்தர் அறிமுகம் செய்த கீழ்நிலை நீதிமன்றம் எது?
   1) பிஸ்கல் நீதிமன்றம் 2) ராத்ஸான் நீதிமன்றம்
   2) சிவில்ராத் நீதிமன்றம் 4) லான்ராத் நீதிமன்றம்
10. தோம்பு முறையை முதலில் அறிமுகப்படுத்தியவர்
   1) ஒல்லாந்தர் 2) போர்த்துக்கேயர் 3) ஆங்கிலேயர் 4) பிரான்சியர்

- 11 – 15 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை இடைவெளிகளில் எழுதுக.

11. கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினால் வரி அறவிடுவதற்காக ……………………… எனும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.
12. 1762 இல் ஜோன்பைபஸ் ……………………… மன்னனைச் சந்தித்தல்.
13. இங்கிலாந்தின் கியூ மாளிகையில் இருந்து எழுதப்பட்ட கடிதம் ……………………….. எனப்பட்டது.
14. 1805 ஆம் ஆண்டு ஆளுநராக ……………………………….. நியமிக்கப்பட்டார்.
15. பிரித்தானியரால் கண்டி இராச்சியம் ………………………. ஆண்டு கைப்பற்றப்பட்டது.

- **16 – 20 வரையான வினாக்களுக்கு சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும்**

**அடையாளமிடுக.**

16. ஆங்கிலேயர் முத்துச்சாமியை கண்டி அரசனாக நியமித்தான் ( )
17. 1795 ஆம் ஆண்டில் ரொபட் அன்றூஸ் , இராஜாதி இராஜசிங்க மன்னனை சந்தித்தல் ( )

18. பொருளாதார நடவடிக்கைகள் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினாலும் அரசியல் நடவடிக்கைகள் பிரத்தானிய அரசாங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டது முடிக்குரிய குடியேற்ற நாடாக்கியமை ( )

19. 1803 ஆம் ஆண்டு மெக்டோவலின் தலைமையிலான படை கண்டி நகரினுள் பிரவேசித்தது ( )

20. 1798 – 1802 வரையான ஆட்சி இரட்டை ஆட்சியாகும். ( )

## பகுதி – II

**ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

**01.**

1) ஒல்லாந்தரால் நிறுவப்பட்ட கோட்டைகள் 3 தருக.
2) மன்னன் ஒல்லாந்தருக்கு வழங்கிய பரிசில்கள் 3 தருக.
3) ஒல்லாந்தத் தூதுவர் மன்னனுக்கு வழங்கிய பரிசில்கள் 4 தருக.

**02.**

1) 1765 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் கண்டி ஆக்கிரமிக்கப்பட்ட போது மன்னன் பாதுகாப்பிற்காக தப்பிச் சென்ற இடம் யாது?
2) கி.பி 1766 ஆம் உடன்டிக்கையில் எத்தனை உறுப்பரைகள் காணப்படுகின்றன.
3) 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் இரண்டு உறுப்பரைகள் எழுதுக.

**03.**

1) இலங்கைக்கு ஒல்லாந்தர்கள் முதன் முதலாக எத்தனையாம் ஆண்டு அச்சியந்திரத்தைக் கொண்டு வந்தனர்.
2) ஒல்லாந்தர் எத்தனை ஆண்டுகள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தனர்.
3) ஒல்லாந்தர் மேலதிக இலாபத்தை பெறுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் 2 தருக.

**04.**

1) பிரித்தானியரது கவனம் இலங்கை மீது திரும்பியதற்கான காரணங்கள் 3 தருக.
2) பிரித்தானியர் இலங்கையில் இருந்து பெற்றுக் கொண்ட வாசனைத்திரவியங்கள் 3 தருக.
3) பிரித்தானியருக்கும் கண்டி மன்னருக்கும் இடையே தூதுத் தொடர்புகளை மேற்கொண்ட தூதுவர் இருவரைக் குறிப்பிடுக.

**05.**

1) கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக்கு எதிராக கரையோரப் பிரதேசங்களில் எத்தனையாம் ஆண்டு கலகம் ஏற்பட்டது?
2) அக்கலகத்திற்கான காரணங்கள் 2 தருக.
3) மியூரன் ஆணைக்குழு என்றால் என்ன?

**06.**

1) பிரித்தானியரால் கண்டி இராச்சியம் எத்தனையாம் ஆண்டு கைப்பற்றப்பட்டது?
2) கண்டி உடன்படிக்கையில் எத்தனை வாசகங்கள் காணப்படுகின்றன.
3) கண்டி ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டவர்கள் யாவர்?

**07.**

இலங்கை புறவுருவப்படத்தில் பின்வரும் இடங்களை குறித்துப் பெயரிடுக.

1) கொழும்பு
2) மாத்தறை
3) நீர் கொழும்பு
4) கற்பிட்டி
5) மன்னார்
6) யாழ்ப்பாணம்
7) திருகோணமலை
8) மட்டக்களப்பு
9) கண்டி
10) காலி

